LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

# A HISTORICAL VIEW OF BATTICALOA METHODIST CENTRAL COLLEGE

BY

NAME- MR.RAMANATHAN LEPANTHAN

REG .NO -EU/IS/2011/AC/74

INDEX NO -CS 4374

THE DESSERTSTION SUBMITTED FOR THE PORTIAL FULFILLMENT OF THE REGUIRMENTS FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA.

FAC496
Project Report
Library - EUSL

DEPARTMENT OF HISTORY

FACULTY OF ARTS CULTURE

EASTERN UNIVERSITY

SRI LANKA

2017

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

பிரித்தானியர்களுடைய ஆட்சிக்காலம் இலங்கை வரலாற்றிலே முக்கியமான ஓர் காலமாக காணப்படுகின்றது 1796 ஆம் ஆண்டில் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றிய பின்னர் சமய, சமுக, பொருளாதார, அரசியல் ரீதியில் பல்வேறு வகையான அபிவிருத்திகளை மேற்கொண்டனர் இவர்களது ஆட்சியில் கல்வித் துறையில் அதிக அபிவிருத்திகள் ஏற்பட்டன. கிறிஸ்தவ மதத்தையும், அதன் பண்பாட்டையும் இலங்கை மக்களிடையே பரப்புவதற்கு வருகைதந்த மிஷனரிகள் கல்வியினை தமது சமயம் பரப்பும் உத்தியாகப் பயன்படுத்தினர்.

இக்காலத்தில் அமெரிக்க, மெதடிஸ்த, கத்தோலிக்க, பப்பிட்டிஸ் போன்ற மிஷனரிகள் கல்விப் பணியினை அதிகமாக முன்னெடுத்தனர். அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் மெதடிஸ்த மிஷனரியினரே முதன்முதலில் கல்விக்கூடங்களை ஆரம்பித்து செயற்படுத்தினர். இலங்கை மக்களுக்கு சேவை புரிவதற்காக வருகைதந்த இவர்கள் மக்களின் வாழ்க்கை முறையை முன்னேற்ற கல்வியினை ஊடகமாக பயன்படுத்தினர். அதற்காக பல பாடசாலைகளையும், கலாசாலைகளையும் மட்டக்களப்பு பகுதியில் உருவாக்கினர்.

இவ்வாறான மட்டக்களப்பினுடைய சமுகப் பின்னனியில் 1814 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மெதடிஸ்த மிஷனரி ஆகிய வண வில்லியம் ஓல்ட் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1814 ஆம் ஆண்டிலிருந்து 1960 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மெதடிஸ்த மிஷனரியின் பொறுப்பிலும் 1960 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரசாங்கத்தின் கீழும் இயங்கி வருகின்றது. இக்காலத்தில் கல்லூரியின் வரலாற்றுச் சம்பவங்களும் ஏனைய விடயங்களும் ''வரலாற்று பார்வையில் மெதடிஸ்த மத்தியகல்லூரி'' என்ற தலைப்பிலான எனது ஆய்வறிக்கையின் ஊடாக தரப்பட்டுள்ளது. அந்தவகையில் கல்லூரிசார் அறிக்கைகள், நூல்கள், சஞ்சிகைகள், நேர்காணல்கள் மூலம் பெற்றுக்கொண்ட தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்வறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது ஆய்வு நோக்கம் கருதி நான்கு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது முதலாவது அத்தியாயம் ஆய்வின் அறிமுகம், ஆய்வின் நோக்கம், ஆய்வுக் கருதுகோள், ஆய்வுப் பிரச்சனை, தரவு சேகரிப்பு, ஆய்வு அனுகுமுறை, இலக்கிய மீளாய்வு, அத்தியாயப் பகுப்பு ஆகிய விடயங்ளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இரண்டாவது அத்தியாயத்தின் தலைப்பிற்கு ஏற்றவகையில் கல்லூரி வரலாறு பற்றி மிசனரிகளின் செயற்பாடுகள், மட்டக்களப்பின் மிசனரிகளின் பணிகள், பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி, தற்கால நிலை போன்றவற்றை கொண்டதாக அமைந்துள்ளது.

மூன்றாவது அத்தியாயம் இரு நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட பாடசாலையின் ஏனைய பணிகள் எனும் தலைப்பில் கல்வி வளர்ச்சி, விளையாட்டுத்துறை வளர்ச்சி, சமுகப் பணிகள், கலாசாரப் பணிகள், பாடசாலை சார் அமைப்புக்கள், கல்லூரி வெளியீடுகள் என்ற அம்சங்களை உள்ளடக்கி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நான்காவது அத்தியாயத்தில் முடிவுரை எனும் தலைப்பில் பாடசாலையின் வளர்ச்சிப் போக்கு, தற்காலச் சவால்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளேன்.

இவ்வாய்வுக் கட்டுரையானது ஒரு வரலாற்று ஆய்வாக உள்ளதாலும், ஆவணப்படுத்தல் முறை காணப்படுவதாலும் பிற்காலத்தில் பெரிய ஆய்வுகளுக்கான ஒரு வழியை ஏற்படுத்தக்கூடும்.

ஆய்வாளர்.

## உள்ளடக்கம்.


| | | |
|---|---|---|
| அத்தியாயம் - 1 | அறிமுகம் | 1-10 |
| அத்தியாயம் - 2 | மெதடிஸ்த மத்திய கல்லூரி வரலாறு | 11-48 |
| அத்தியாயம் - 3 | கல்லூரியின் ஏனைய பணிகள் | 49-84 |
| அத்தியாயம் - 4 | முடிவுரை | 85-91 |

உசாத்துணைகள்

பின்னிணைப்பு – படங்கள்